அடுத்த ஆண்டுககுள் சிங்களத்தில தேர்ச்சி:

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை-தம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் ·
போன் 389

National Tamil Daily

இதழ் 55
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ பங்குனி23 ஜுல்ஹஜ் 25 வியாழக்கிழமை [6-4-67]

## அரசாங்க சேவைக் கமிஷன் விடுத்துள்ள அறிக்கை

கொழும்பு, புதன் அரசாங்க சேவையிலுள்ள எல்லா புதிய ஊழியர்களும் அடுத்த ஆண்டுக்குள் தமது சிங்கள தகுதிப் பரீட்சைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும். தவறினுல் அவர்கள் சேவையிலிருந்து நீக்கப்படுவார்கள்.

இந்த அறிவித்தலை அரசாங்க சேவைக் கமிஷன் விடுத்திருக்கின்றது.

புதிய ஊழியர்கள் 1963-ம் ஆண்டுக்கு முன்னர் சேர்ந்தவர்கள் என்றும் 1963-ம்ஆண்டுக்குப்பின்னர் சேர்ந்தவர்கள் என்றும் பிரிக்கப்பட்டுள்ளனர்.

1963-ம் ஆண்டுக்கு முன்னர் சேர்ந்தவர்கள் தங்களின் சிங்களகத்தேர்ச்சி பரீட்சையை பூர்த்திசெய்து கொண்டபின்னர் நிறுத்தப்பட்ட சம்பள உயர்வை பெறுவார்கள். 1963-ம் ஆண்டுக்குப்பிறகு சேர்ந்தவர்கள் சிங்கள தேர்ச்சி பரீட்சையைப் பூர்த்திசெய்

[6-ம் பக்கம் பார்க்க]

### ஜனப்பிரதிநிதிகள் சபையில்

# மொழி பெயர்ப்புக் குறைகளை நீக்க தமிழ் எம். பி. பிரேரணை

## ஹன்சார்ட்டில் 3 மொழிகளிலும் நிகழ்ச்சிகள் இடம்பெற கோரிக்கை

கொழும்பு, புதன் ஜனப்பிரதிநிதிகள் சபையில் தமிழில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு 'ஹன்சார்ட்' அறிக்கையிலும் அவை இடம்பெறச்செயவதற்கும், சிங்களத்தில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு ஹன்சார்ட்டில் இடம்பெறச்செய்வதற்கும்; ஆங்கிலத்தில நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகள் தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்படுவதுடன் அவை ஹன்சார்ட்டில் இடம்பெறச்செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் இன்று ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தார்

இப்பிரேரணைமீது பண்டிதர் இரத்தினம் பேசுகையில், தமிழில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளுக்கு சில சமயங்களில் சிங்களத்தில் மட்டும் பதில் அளிக்கப்படுகின்றது என்றும், அதனுல் சிங்களம் தெரியாத தமிழ் அங்கத்தவர்கள் விளங்கிக்கொள்ளமுடியாமல் திண்டாட நேர்கிறதென்றும், அதுபோலவே தமிழில் கேட்கப்படும் கேள்விகளை தமிழ் தெரியாத அங்கத்தவர்களும் கஷ்டங்களுக்குள்ளாகிறுர்கள் என்றும் கூறினுர்.

சொற்பொழிவுகள் ஏககாலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு ஹன்சார்டிலும் அவை இடம்பெற்றுல் ஜனப்பிரதிநிதிகள் சபை அங்கத்தவர்கள் எல்லோருமே அதைப் புரிந்துகொள்ளவும் பொதுமக்கள் சபை நிகழ்ச்சிகளைத் தெரிந்துகொள்ளவும் வசதியாய் இருக்குமென்றும் அவர் விளக்கினுர்.

### ஜனநாயக உரிமை

மட்டக்களப்பு எம். பி. திரு. சி. இராஜதுரை பேசுகையில், பார்லிமெண்டில் சொற்யொழிவுகள் இரு மொழிகளில் மொழிபெயர்க்

(6-ம் பக்கம் பார்க்க)

### யாழ். மாநகரசபை நிர்வாகம

## மாஜி அங்கத்தவர்கள் மந்திரிக்குத் தந்தி

### விசாரணை செய்ய அதிகாரிகளை அனுப்ப வேண்டுமாம்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாண மாநகரசபையின் விசேஷ ஆணையாளர் நிர்வாகத்தில் வரியிறுப்பாளரின் பணம் வீணுகச் செலவிடப்படுகிறதென்றும் நிர்வாக ஊழல்களுக்கு வேறு பல சான்றுகளிருப்பதாகவும் இக்குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணைசெய்ய அதிகாரிகள் குழுவொன்றை அனுப்பிவைக்கும்படியும் யாழ்ப்பாண மாநகரசபையின் முன்ளுள் அங்கத்தவர்கள் ஆறுபேர் உள்ளூராட்சி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள ஒரு தந்தியில் கேட்டுள்ளனர்.

திருவாளர்கள் கே. வி. தெய்வேந்திரன், ஏ. ஜி இராஜசூரியர், ஏ. நடராஜா, ஏ. அந்தனி, தா. ச. துரைராசா, த. கந்தையா, எம். எஸ். பேரின்பநாயகம் ஆகியோரின் கையொப்பத்துடன் அனுப்பியுள்ள இத் தந்தியில் விசேஷ ஆணையாளரின் நிர்வாகத்தில் மாநகர சபை ஊழியர் ஒருவரும் அவரது உறவினரான முன்ளுள் மேயர் ஒருவரும் தலையிடுவதாகவும் குற்றம் சாட்டியிருக்கின்றனர்.

### வவனியாவில்

## கைதுசெய்யப்பட்ட பொலிஸ் அதிகாரி வேலை நீக்கம்

யாழ்ப்பாணம், வியா. கைதுசெய்யப்பட்டிருக்கும் வவனியா பொலிஸ் நிலைய சப்இன்ஸ்பெக்டரான திரு.பெரேராவை உடனடியாக தற்காலிகவேலைநீக்கம் செய்யுமாறு உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக்அபயகுணவாத்தனு வடமாகாண பொலிஸ்சுப்பிரின்டன் திரு. சுந்தரலிங்கத்துக்கு நேற்றுக் காலை உத்தரவிட்டார்.

பொலிஸ்சுப்ரின்டன் திரு. சுந்தரலிங்கத்தின் உத்தரவின் பேரிலேயே திரு. பெரேரா மன்னுர் உதவிப் பொலிஸ் சுப்ரின்டனுன திரு. பொன்சேகாவினுல் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருந்தார்.

கடந்தமாதம் 27ந் திகதி காலை 11மணியளவில் வவனியா பொலிஸ் நிலையத்துக்குப் புகார் ஒன்று செய்வதற்காகச் சென்ற 17 வயதான இளம்பெண்ணுன பார்வதி என்பவரை தனிமையாக விசாரணை செய்வதற்காக வருமாறு சம்பந்தப்பட்ட பெரேரா ஜீப்பில் அழைத்துச்சென்று தகாதமுறையில் நடந்துகொண்டதாகச் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்தே பெரேராவைக் கைதுசெய்யுமாறு பொலிஸ்சுப்ரின்டன், உதவி பொலிஸ் சுப்ரின்டனுக்கு உத்தரவிட்டிருந்தார்.

வவனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் நாகரத்தினம் பார்வதியைப் பரிசோதனைசெய்தார்.

திரு.பெரேரா இம்மாதம் 12ந் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். வவனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் ஊழியர் ஒருவரும் இச்சம்பவத்துக்கு திரு. பெரேராவுடன் உடந்தையாக இருந்ததாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது. சப்பந்தப்பட்ட பொலிஸ் ஊழியரைக் கண்டுபிடிப்பதற்காக இம்மாதம்12ந் திகதிபொலிஸாரின் அடையாள அணிவகுப்பொன்றை நடாத்துமாறு பொலிஸ் சுப்ரீன்டன் உத்தரவிட்டுள்ளார். மேலும் விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. (நி.நி.)

### மாவட்டசபை மசோதா

### மந்திரிகள் பரிசீலனை

கொழும்பு, புதன் மாவட்ட சபைகள் மசோதா தயாரிக்கப்பட்டு கடந்த சில தினங்களாக மந்திரிகள் அதனை பரிசீலனை செய்ததாகவும் அறியப்படுகின்றது.

மசோதாவில் பல அம்சங்களை மந்திரிகள் ஏற்றுக்கொண்டதுடன் வேறு சிலவற்றில் கருத்துவேறுபாடு கொண்டதாகவும் தெரிகின்றது.

மாவட்ட சபைகள் மசோதாவை சட்ட தயாரிப்பாளர்களின் உதவியுடன் மறு பரிசீலனை செய்யும் படி உள்ளூராட்சி பந்திரி கேட்கப் [illegible]

### வியட்னும் தகராறு

## பிரதமர் டட்லியின் புதிய சமரச முயற்சி

### ஹனேய் நகருக்கு ரெபர்ட் போகிறுர்

கொழுப்பு, புதன் வியட்னும் தகராறுகளில் சமரசம் ஏற்படுத்தி வைப்பதற்கு பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா புதிய முயற்சியொன்றை மேற்கொண்டுள்ளார்.

தமது சமரச யோசனைகளைத் தெரிவிக்கும் வகையில் திரு. றெபர்ட் குணவர்தனவை பிரதம மந்திரி ஹனேய்க்கு அனுப்பியுள்ளார்.

வியட்னும் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை இலங்கை மதிக்கின்றது. வியட்னும் பிரச்சினை முற்றிலும் உள்நாட்டுப் பிரச்சினை. அதனை அந்நாட்டு மக்களே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் பிரதமர் தமது அலோசனைகளைத் தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

(6-ம் பக்கம் பார்க்க)

மரண அறிவித்தல்

அட்வகேட் கணேசலிங்கம்

திருமதி சோமேஸ்வரி கணேசலிங்கத்தின் அருமைக் கணவரும், தம்பிராஜா தம்பதிகளின் மகனும், என்ஜினியர் ரி. சண்முகதாஸின் சகோதரரும், காலஞ்சென்ற மின்சார சுப்பிரிண்டன் திரு. செல்வத்துரை, போர்மன் கந்தசாமி, துரை ஆகியவர்களின் மருமகனுமான அட்வகேட் கணேசலிங்கம் காலமாகிவிட்டார். ஈமக்கிரியைகள் இன்று [6-4-67] மாலை 4 மணிக்கு கனத்தை மயானத்தில் இடம்பெறும்.

1728 — தகவல் சகோதரர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உடலுள்ளபோதே உயிர்ப்பயனைத் தேடி வைத்துக்கொள்ள வேண்டும். தரித்திரனுக்கு மாணிக்கம் கிடைத்தால் அவன் எவ்வாறு போற்றுவானே அதைவிட அதிகமாகவே போற்றிக்கொள்ள வேண்டும். உயிர்ப்பயனை அடையும் வழிதான் இறைவழிபாடு.

—கயிலைக்குருமணி.

ஈழநாடு
Eelanadu Natioal Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ வரு
பங்குனி மீ 23உ (6-4-67)

## கடற்றொழில் விருத்தி

தூரக்கடல் தாண்டி மீன் பிடிப்பதற்கு இலங்கை மீனவர் சிலர் புறப்பட்டுச் சென்றிருக்கின்றனர். இலங்கை மீன்பிடிக் கூட்டுஸ்தாபனம் புதிதாக வாங்கிய இரண்டு மீன்பிடிக்கப்பல்களில் இவர்கள் சென்றுள்ளனர். ஆயிரம் மைல்கள் கடலில் பிரயாணம் செய்து சுமார் இரண்டு மாதங்களின் பின் அவர்கள் திரும்பிவந்து சேர்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் வெற்றியுடன் திரும்பிவர நாமும் வாழ்த்துவோம்.

இலங்கை கடலால் சூழப்பட்ட தீவு. உலகில் பெருகிவரும் ஜனத்தொகைக்கேற்ப உணவு உற்பத்தி அதிகரிக்கவில்லை. இதனால்தான் பல இடங்களிலும் பசியும், பஞ்சமும் ஏற்பட்டுள்ளது. மனிதனுக்குத் தேவையான உணவு முழுவதையும் தரையிலிருந்து மட்டும் பெற்றுவிடமுடியாது. கடலிலும் மனிதனுக்குவேண்டிய உணவு நிறைய இருக்கிறதென்றும் அதைப் பயன்படுத்த வேண்டுமென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இலங்கையைப்பொறுத்தவரையில் நாற்புறமும் கடல் இருந்தாலும், ஆழ்கடலைக் கண்டும் அஞ்சாத மீனவர்களிருந்தாலும் மீன்பிடித்தொழிலை விருத்திசெய்வதில் மீனவர்களுக்கு வசதியும் வாய்ப்பும அளிக்கப்படவில்லை; அரசாங்கம் போதிய ஊக்கமும், உற்சாகமும், உதவியும் அளிக்கவில்லை. இதனால் கடல் நடுவே நாம் வாழ்ந்தாலும் நமக்குத் தேவையான மீன்களைக் கூட, நமது கடலில் மீன்பிடித்துச் சென்று டப்பாக்களில் அடைத்துவைத்துள்ள பிறநாடுகளிலிருந்து நாம் இறக்குமதி செய்ய வேண்டிய நிலையிலிருந்து வந்திருக்கிறோம். நமது தேவையையே நாம் இன்னும், பூர்த்தி செய்யக்கூடிய நிலையை இன்னும் நாம் அடையவில்லை.

இச் சமயத்தில்தான் அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளில் கிராக்கியுள்ள சில இன மீன்களைப் பிடித்து அந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவே இந்த இரு புதியகப்பல்களும் ஆழ்கடலுக்குச் சென்றிருக்கின்றன. மீன் ஏற்றுமதி செய்வது நல்லதே. அதனால் நமக்கு வெளிநாட்டுச்செலாவணி கிடைக்கும். இந்த முயற்சி வரவேற்கத்தக்கது ஆனால் நமது தேவையையே நாம் நிறைவேற்றிக் கொள்ள முடியாமல், வெளிநாடுகளை எதிர்பார்த்திருக்கையில் ஏற்றுமதியினால் என்ன பயன்?

மீன்பிடிக் கூட்டுஸ்தாபனம் சென்ற வருடத்தில்நஷ்டத்தையேகாட்டியிருக்கிறது. பத்து வருடத் திட்டமொன்றை பெரிய புத்தகமாக வெளியிட்டது. பயன் பூஜ்யம் தான். புதிதாக வாங்கியுள்ள இரண்டு மீன்பிடிக் கப்பல்களும் கூட்டுஸ்தாபனத்துக்குத்தான் புதியவை. முன்பும் கூட லட்சக்கணக்கான ரூபாய் செலவில் வாங்கிய கப்பல் சில வருடங்களின் பின் கழிவு பொருளாகக் கணிக்கப்பட்டு சில ஆயிரம் ரூபாய்களுக்கு விற்கப்பட்டது.

உள்நாட்டில் மீன்பிடித்தொழிலில் விருத்திசெய்வதற்கான நடவடிக்கைகள் திட்டமிட்டு, ஒருமுகப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும். மீன்பிடித்துறைகள் விருத்திசெய்யப்பட வேண்டும். வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைகளுடன் நம்நாட்டு மீனவர்களின் கருத்தையும் அறிந்து அவற்றைச் செயற்படுத்தினால் கடற்றொழில் விருத்தியடைந்து நமது தேவையும் நிறைவேறும்; வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதிசெய்ய முடியும்.

## பகிஷ்கரிப்புக்கு தண்டனை

குரும்பசிட்டி, புதன்

கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவை பகிஷ்கரிப்புச் செய்த ஒன்பது உயர்தர வகுப்பு மாணவர்கள் தவணைப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படாததுடன் ஒரு வாரகாலம் பாடசாலைக்கு வருவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளனர். இந்த ஒழுங்கு நடவடிக்கையை தெல்லிப்பழையிலுள்ள ஒரு கல்லூரி அதிபர் மேற்கொண்டுள்ளார்.

யூனியன் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டி சென்றவருடம் சாம்பியனுகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தது. இதனால் இரு வீரர்களுக்கு விசேஷ விருது வழங்கிக் கௌரவிக்க உடற்பயிற்சிப் போதனசிரியர் முன்வந்தார். ஆனால் கோஷ்டிவீரர்கள் ஆறுபேருக்கு விருது வழங்கக்கோரினர். இக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதையடுத்து ஒன்பது வீரர் தமக்கு வழங்கப்படவிருந்த வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுக் கொள்ளாது பகிஷ்கரித்தனர்.

## கிணற்றுநீர் பாசனவசதி

குரும்பசிட்டி, புதன்

குரும்பசிட்டி [பேய்க்கிணறு] வற்ருத நீர்ஊற்றிலிருந்து நீர்ப்பாசனம் செய்வதற்கான ஆரம்பவேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. நீர்ப்பாசன இலாகா அதிகாரிகள் ஸ்தலத்தில் பரிசோதனைகள் நடாத்துகின்றனர். 49 ஆயிரம் ரூபாய் செலவில் சுமார் 75 ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

## துவஜாரோகண விழா

நீர்வேலி, புதன்

நீர்வேலிக் கந்தசுவாமி கோவில் துவஜாரோகண விழா நாளை வியாழக்கிழமை பகல் நடைபெறும். அன்று இரவு 8-00 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் 'முருகம்மையார்' என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் செய்வார்.

# யாழ்ப்பாணத்தில் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

## விதிகளை மீறுவதே காரணம்என பொலிசார் அறிவிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் தற்போது வாகனங்களால் ஏற்படும் விபத்துக்கள் அதிகரித்து வருவதாகவும், இவ் விபத்துக்களில் அநேகமாக கல்லூரி மாணவர்களே சிக்குவதாகவும் பொலிஸார் சேகரித்துள்ள புள்ளிவிபரக் கணக்கின்படி தெரியவந்துள்ளது.

இவ்விபத்துக்கள் ஏற்படும்போது அதிகமான கல்லூரி மாணவர்களும் சைக்கிளிலேயே சென்றுள்ளதாகவும், இருவரை ஏற்றிக்கொண்டும், அசிரத்தையாகவும் சைக்கிள்களை செலுத்துவதாலேயே இந்த விபத்துக்கள் நேர்ந்துள்ளதாகவும் பொலிஸாரின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துக்களைத் தடுக்கு முகமாக இலவச பயிற்சி வகுப்புக்களை நடாத்த யாழ்ப்பாணம் பொலிஸார் முன்வந்துள்ளனர். மாணவர்கள் வீதிகளில் எவ்வாறு சைக்கிள்களைச் செலுத்த வேண்டும், எவ்வாறு வீதி ஒழுங்கு முறைகளை அனுசரிக்க வேண்டும் என்பன பற்றி மாணவர்களுக்கு விளக்க இப் பயிற்சி வகுப்புக்களை இம்மாதம் முதல் யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பொலிஸ் பகுதிப் பொறுப்பதிகாரி திரு. ஏ. கந்தையா தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் ஒவ்வொரு கல்லூரிக்கும் சென்று நடாத்துவார்கள். இப்பயிற்சி வகுப்புக்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல கல்லூரிகளிலும் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. [ந. நி.]

# 'வள்ளுவர், நாவலர் முத்திரைகளை வெளியிடுக'

யாழ்ப்பாணம் வியா.

திருவள்ளுவரினதும் ஆறுமுக நாவலரினதும் உருவம் பொறித்த முத்திரைகளை அவர்களதுநினைவு தினத்தை முன்னிட்டு வெளியிடுமாறு யாழ்ப்பாணம் இந்து இளைஞர் மாமன்றத்தினர் பிரதம மந்திரி டட்லி சேனநாயகாவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழ்வளர்த்த பெரியார்களில் திருவள்ளுவரும் ஆறுமுகநாவலரும் முக்கியமானவர்களென்றும் அவர்களது உருவங்களைப் பொறித்த முத்திரைகளை வெளியிட வேண்டியது மிகமிகஅவசியமென்றும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம், கலாச்சார அமைச்சர் திரு. இரியகொல்லை உட்பட தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

[ந. நி.]

# கொழும்பில் சிலபகுதிகளில் நீருக்குக் கட்டணம்

கொழும்பு, புதன்

தெஹிவளை, கல்கிசை, மொரட்டுவை, பாணந்துறை, கோட்டே, கொலன்னுவை ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் குழாய் மூலமாகப் பெறும் தண்ணீருக்கு இனிமேல் பணம் செலுத்த வேண்டியிருக்கும்.

வர்த்தக ஸ்தாபனங்களில் இவ்விதம் உபயோகிக்கப்படும் நீருக்கும் அந்தஸ்தாபனங்கள் பணம்செலுத்த வேண்டிவரும்.

தண்ணீர் வீணுக்கப்படுவதைத்தடைசெய்யும்நோக்கத்துடனும் உள்ளூராட்சி மன்றங்களிடம் போதியநிதிவசதி இல்லாதகாரணத்தினுலுமே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆயிரம் கலன் நீருக்கு 60 சதம் செலவாகிறது என்பதனை அறியாத பலர் நீரை வீணுக்குவதாகவும் இவ்வித கட்டணம் அறவிட்டாலதான் அருமை தெரிந்து சிக்கனமாக நீரை உபயோகிப்பார்களெனவும் உள்ளூராட்சி ஸ்தாபன அதிகாரிகள் கருத்துத்தெரிவித்துள்ளனர்

## தீண்டாமை ஒழிப்புக்குழு

குரும்பசிட்டி, புதன்

தமிழரசுக் கட்சியின் தீண்டாமை ஒழிப்புக் குழுவினர் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள கட்சித் தலைமைக் காரியாலயத்தில் சந்தித்து சிறுபான்மைத் தமிழ் சமூகத்தினரின் ஆலய, தேநீர்க் கடைப் பிரவேசம் குறித்து ஆலோசனை நடாத்தவிருக்கின்றனர். இக் கமிட்டியில் அங்கம் வகிக்கும் நல்லூர் எம். பி. டாக்டர். இ. எம். வி. நாகநாதன், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், திருவாளர்கள் ஜி. நல்லையா, ஜி. பி. வின்சென்ற், ஜே. எஸ். சுந்தரம் ஆகியோர் அண்மையில் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா கூட்டிய மாகநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் பற்றி ஆலோசனை செய்வர் எனத் தெரிகிறது.

## ''ஒத்துழைப்பு வேண்டும்''

குரும்பசிட்டி, புதன்

''பன்னிரண்டு கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட காங்கேசன்துறை பொலிஸ் பகுதியில் தற்போது சுமார் 55 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மட்டுமே கடமையாற்றுகின்றனர். கள்ளக் குடியேற்றம், கள்ளக் கடத்தல், கசிப்பு உற்பத்தி மற்றும் திருட்டுக் குற்றச் செயல்கள் அதிக அளவில் நடைபெறும். இப் பொலிஸ் பிரிவில் குற்றச் செயல்களைக் கண்டு பிடித்துப் பொலிஸாருக்கு உதவி செய்வதில் பொது மக்கள் முன்வர வேண்டும். கிராமந்தோறும் தொண்டர்படை நிறுவிக் குற்றச் செயல்கள் அதிகரிப்பதைத்தடை செய்யமக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும். என்னும் வேண்டுகோளை காங்கேசன்துறை தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி விடுத்துள்ளார்,

## மகோற்சவம்

நீர்வேலி, புதன்

நீர்வேலிகந்தசாமிதேவஸ்தான மகோற்சவ நாளை ஆரம்பமாகித் தொடர்ந்து இருபது தினங்கள் நடைபெறும். 12ந்திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் மறுநாள் பூங்காவனமும் அதனையடுத்து சண்டேசுவரோற்சவமும் இடம் பெறும்.

# ஐயாறன் எழுதுகிறான்

''நியூயார்க் நகரிலே இரண்டே நாட்கள் இருப்பதென்றுதான் சென்றேன். முன்பின் அங்கு யாரையும் தெரியாது. ஆனால் பல அமெரிக்க அன்பர்கள் கூடி, என்னை ஐந்து மாதங்கள் தங்கி இருக்கச்செய்ததுடன் பூரண யோக நிலையத்தை ஆரம்பித்து நடத்தியும் வருகின்றனர்'' என்று வெளிநாடுகளில் சுமார் ஒரு வருட காலம் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு இலங்கை திரும்பியுள்ள யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தர் தெரிவித்தார்.

அமெரிக்க அன்பர்கள் பலர் சுவாமியை அங்கேயே நீண்டகால விசா பெற்று வந்திருக்கும்படி கேட்கின்றனராம். யோகாசனங்களில் மட்டுமன்றி ஆத்மீகத் துறையில் அமெரிக்க பொது மக்கள் அதிக சிரத்தை காட்டுவதாகவும் தெரிகிறது. சிறப்பாக இந்தியா என்ருல், ஞானிகள் நிறைந்த புண்ணிய பூமி என்று கருதுவதுடன் இந்தியக்கலை, கலாசாரம் முதலியவற்றில் புதிய மதிப்புக்கொண்டு சிரத்தை காட்டுவதாகவும் சொன்னர்.

ஏன் இப்படி என்று கேட்டதற்கு. பணம் பணம் என்று பணத்தையே தெய்வமாகவும், சிற்றின்பங்களே வாழ்க்கையின் குறிக்கோள் என்றும் இருந்தவர்கள், பணத்தினல் மட்டும் இன்பமும் அமைதியும் காணமுடியாமல், மனச்சாந்தியும் இழந்து, ஆத்மீக இன்பமே இன்பமென்று உணர்ந்து, அதைப் பெறுவதில் இப்போது அவர்கள் அதிகமாக முனைந்திருப்பதாகவும் தெரிவிக்கிருர் சுவாமி.

முதலில் சிறிய இடத்தை வாடகைக்குப் பிடித்தனராம். அது காணுமல் பின்னர் மாதம் 500 டாலர் வாடகைக்குப் பெரிய இடத்தை ஒழுங்குசெய்ததாயும், ஆயிரம் பேருக்குமேல் கூடி சுவாமியின் பேச்சைக் கேட்டதாயும் தெரிகிறது. அங்கு ஆத்மீகக் கூட்டங்களுக்கு சாதாரணமாக நூறு பேர் வந்தால் அதிகமாம். ஆனல் சுவாமியின் பேச்சைக் கேட்க ஆயிரத்துக்கும்அதிகமானவர் கட்டணமும் செலுத்தி வந்ததாயும்அறிய மகிழ்ச்சியாக இருந்தது. சுவாமியின் பெரிய படம் அடங்கிய அமெரிக்க சுவரொட்டி விளம்பரத்தையும் கண்டேன்.

வெறும் யோகாசனங்களில் மட்டுமன்றி, அடிப்படை ஆத்மீக உண்மைகளை அறிவதில் அமெரிக்கர்அதிக ஆவல் கொண்டிருக்கிருர்களாம். அமெரிக்கருக்கு ஆத்மீக தாகம் அதிகரித்து மனம் மாறுவதாயின் உலகத்துக்கே அதனல் எவ்வளவு நல்ல பயன் ஏற்படும்?

சுவாமி சச்சிதானந்தர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதை அறிந்து, சுழிபுரத்திலிருந்து ஓர் அன்பர், பசும்பால் கறந்து அவருக்குக் கொடுக்க அன்புடனும் ஆவலுடனும்வந்து விசாரித்தார். சுவாமிஜியின் மேல்நாட்டு அனுபவங்கள் பலவும் மிக ருசியானவை. அவர் இங்கு பல கூட்டங்களில் பேச ஏற்பாடாகியிருக்கிறது. கட்டணமில்லை!

ஃ ஃ ஃ

முந்தாநாள் மாலையில் இங்கு பல தெருக்களிலும் ஆங்காங்கே மக்கள் கூட்டமாகக் கூடி திருச்சி வானெலியை ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தனர். முதல் அமைச்சர் அறிஞர் அண்ணு

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய சுற்றுப்பயணத்தை யுதாண்ட் ஆரம்பித்தார்

## நேரு சமாதானப்பரிசை புதுடில்லியில் பெறுவார்

ஜெனிவா, ஏப்ரல் 5

**தமது ஆசிய சுற்றுப்பயணத்தின் முதலாவது கட்டமாக ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் நேற்று ஜெனிவா வந்து சேர்ந்தார். அங்கு ஐ. நா.வின் விசேஷ ஸ்தாபனங்களின் தலைவர் கூட்டத்துக்கு அவர் தலைமைவகிப்பார். அவர் அடுத்து இறங்கும் தலைநகர் கொழும்பாகும். அங்கு அவர் சனிக்கிழமையன்று போய்ச்சேருவார்.**

யுதாண்டின் சுற்றுப்பயணத்தில் இந்தியா, இலங்கை, நேபாளம், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இடம்பெறுகின்றன. இந்நாடுகளின் அழைப்பை ஏற்றே அவர் இந்நாடுகளுக்கு இவ்விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

நேற்று அவர் தமது ஆசிய சுற்றுப்பயணத்துக்காக நியுயோர்க் விமான நிலையத்தை விட்டுப் புறப்படுகையில், ஆசிய நாட்டுத் தலைவர்களுடன் பரஸ்பர விஷயங்கள் பற்றிப் பேச்சுவார்த்தைகளைத் தாம் நடாத்துவாரென்றும், அப்பேச்சுவார்த்தைகளில் வியட்னும் பிரச்னை இடம்பெறுவதைத் தவிர்க்க முடியாதெனவும் அவர் பத்திரிகையாளரிடம் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், தமது வியட்னும் சமாதானத்திட்டத்தை வடவியட்னும் நிராகரித்துள்ளதைத் தாம் உத்தியோகபூர்வமாக இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லையெனத் தெரிவித்தார்.

அவரது இந்திய விஜயத்தின்போது, அவர் நேரு சர்வதேசச் சமாதானப் பரிசைப் பெறுவார்.

சர்வதேச கட்டுப்பாட்டுக் கமிஷனில் அங்கம்வகிக்கும் நாடென்ற முறையில் இந்தியாவின் தலைவர்களுடன் யுதாண்ட் நடாத்தவிருக்கும் வியட்னும் சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் விசேஷ முக்கியம் வாய்ந்ததாக அமையுமெனக் கருதப்படுகிறது.

# ராஷ்டிரபதி பதவிக்கு சுப்பாராவின் பெயர்

## உபராஷ்டிரபதி பதவிக்கும் ஒருவர்

### எதிர்க்கட்சிகள் சமர்ப்பித்தனர்

புதுடில்லி, ஏப். 5

இந்திய ராஷ்டிரபதி, உபராஷ்டிரபதி தெரிவுக்கான பெயர்களை எதிர்க் கட்சிகள் பிரதமர் இந்திரா காந்தியிடம் சமர்ப்பித்துள்ளன. சுப்ரீம்கோர்ட் நீதிபதியான திரு. கே. சுப்பாராவ் பெயரை ராஷ்டிரபதி பதவிக்கும், அலிகார் பல்கலைக் கழக உபவேந்தரானநவாப் அலி ஜவார்ஜாவின்பெயரை உபராஷ்டிரபதி பதவிக்கும் எதிர்க்கட்சிகள் பிரேரித்துள்ளன.

இப்பதவிகளுக்கு எதிர்க்கட்சிகள் ஏகமனதாகப் பெயர்களை சமர்ப்பித்தால், அவற்றைத் தாம் ஆலோசனைக்கெடுப்பதாகப் பிரதமர் இந்திராகாந்தி தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில், இவ்விரு பதவிகளுக்கும் யார் யாரை நியமிப்பது என்பது பற்றித் தீர்மானிக்கக் காங்கிரஸ் பார்லிமென்ட் போர்ட் இன்று மாலை புதுடில்லியில் கூடுகிறது. இக்கூட்டம் நேற்றுமாலை நடைபெறவிருந்தது. பின்னர், இன்றுவரை ஒத்திப்போடப்பட்டது. இக்கூட்டத்தில் காங்கிரஸ்கட்சி ராஷ்டிரபதி, உபராஷ்டிரபதி பதவிகளுக்குத் தனது அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும்.

# ரஷ்ய செயற்கைக் கிரகம் மறைந்துவிட்டதாக அறிவிப்பு

## அமெரிக்கா நம்பவில்லை

மாஸ்கோ, ஏப். 5

அண்மையில் வானவெளிக்குரஷ்யா அனுப்பியசெயற்கைக்கிரகம் எங்கோ மறைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனல், அமெரிக்க விஞ்ஞானிகள் இவ்வறிவிப்பை நம்பத்தயாராயில்லை. 'வானவெளிக்கு அனுப்பப்பட்ட செயற்கைக்கிரகம் வானவெளியிலேயே மறைந்துவிடுவதென்பது சாத்தியமல்ல. ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞானப் பிரமாணங்களுக்கு ஒவ்வாததாகும் இது' என அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## சிறைக் கைதிகளை சுட்டசம்பவம்

### இலாகா விசாரணை

விசாகபட்டினம், ஏப். 5

விசாகபட்டினத்தில் நேற்று முன்தினம் சிறையை உடைத்து வெளியேற முயன்றகைதிகள்மீது காவலாளிகள் சுட்டதன் விளைவாக இருஆயுட்கைதிகன் இறந்ததும், 51 பேர் காயமுற்றதும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். இச்சம்பவத்தையிட்டுஇலாகா விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## பெரியபுராண கதாப்பிரசங்கம்

நாவலப்பிட்டி, புதன்

நாவலப்பிட்டி கஜலட்சுமி மண்டபத்தில் திரு. நா.முத்தையாவால் 63 வெள்ளிக்கிழமைகளுக்கு பெரிய புராண கதாப்பிரசங்கம் நடத்தப்படவிருக்கிறது.

## 10,000 தொன் கோதுமை நன்கொடை

புதுடில்லி, ஏப்ரல் 5

இந்தியாவுக்கு 10,000 தொன் கோதுமையை இத்தாலி நன்கொடையாக அனுப்பிவைத்துள்ளது. இக்கோதுமை பாரதப் பிரதமரின் பஞ்சநிவாரண நிதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## வியட்னுமில் அமெரிக்க கொள்கைக்கு செனட்டர் கண்டனம்

வாஷிங்டன், ஏப்ரல் 5

அமெரிக்காவின் வியட்னும் கொள்கை, நேற்று அமெரிக்க செனட் சபையில் கடும் கண்டனத்துக்குள்ளாகியது. தென்வியட்னுமுக்கு ராஜதந்திரியான 72 வயது வாய்ந்த திரு. எல்ஸ்வேத் பங்கர் அமெரிக்க தூதுவராக நியமனம் பெற்றதைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதத்தின்போது, செனற்றர் புல்பிரைற் அமெரிக்க வியட்னும் கொள்கையைக் கண்டித்தார்.

புதிய தூதுவர் திரு. பங்கர் பேசுகையில், தமது வியட்னும் நியமனத்தில் சமாதானத்துக்காகத் தாம் கடுமையாக உழைப்பாரென உறுதியளித்தார்.

## கென்னடி கொலை விசாரணை

### மற்றுமொருவர் கைதானர்

நியூயோர்க், ஏப்ரல் 5

ஜனதிபதி கென்னடி கொலை சம்பந்தமாக ஈடுபட்டவர்களெனச் சந்தேகிக்கப்பட்டமற்றுமொருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரது பெயர் சிமித். கடந்த ஞாயிறன்று வேறு ஒரு நபரும் கைது செய்யப்பட்டார். முதல் முதலாகக் கைதுசெய்யப்பட்டவர் கிளே ஷாவாகும். கென்னடி கொலை விசாரணையை புதிதாக ஆரம்பித்திருக்கும் டிஸ்திரிக் அட்டோர்ணி திரு. கரிஸனின் முயற்சியினலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

## ஆசிய நாடுகளுக்கு பொருளாதர்ர உதவி

டோக்கியோ, ஏப்ரல் 5

ஆசிய, தூரகிழக்கு நாடுகளுக்கான பொருளாதாரக் கமிஷனின் கூட்டத்தின் முதல் நாளாகிய நேற்று ஆசியாவின் பொருளாதார நிலைமைபற்றி ஆராயப்பட்டது.

பொருளாதார உதவி அளிக்கப்படும் நாடுகளுக்கு விதிக்கப்படும் நிபந்தனைகள் தாராளமாக அமையவேண்டுமென்றும், உதவிபெறும் நாடுகளுக்கு கஷ்டமில்லாத முறையில் நீண்டகாலக் கடனுதவி அளிக்கப்படவேண்டுமென்றும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

கூட்டத்தை ஆரம்பித்துவைத்துப் பேசிய ஜப்பானிய பிரதமர், ஆசியபொருளாதார அபிவிருத்திக்கு ஜப்பானின் ஆதரவு எப்போதும் போலவே கிடைத்துவருமெனக் கூறினர். ஜப்பானிய வெளிவிவகார மந்திரி பேசுகையில், ஆசிய பொருளாதாரத்தில் விவசாயிகளுக்கு உள்ள முக்கிய பங்கினை எடுத்துரைத்தார்.

பொருளாதாரக் கமிஷனின் 20 வருட கால சேவையைப் பாராட்டி ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்ட் ஒரு செய்தி அனுப்பியிருந்தார். அவரதுபிரதிநிதியாக திரு. பார்த்தசாரதி இம்மாநாட்டில் கலந்துகொண்டுள்ளார்.

## தென் அராபியாவில் பலாத்காரம்

ஏடன், ஏப்ரல் 5

தென் அராபிய சமஷ்டியில் இரண்டாவது நாளாக பலாத்காரச் செயல்கள் தொடர்ந்து நேற்று நடைபெற்றன. அராபிய தேசியவாதிகளுக்கும், பிரிட்டிஷ் துருப்புகளுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பில் 3 அராபியர் கொல்லப்பட்டனர். இருவர் காயமுற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

# சென்னை மத்திய சிறையில் ருசிகரமான சம்பவம்

## கூரையில் இரு கைதிகள்

சென்னை, ஏப்ரல் 5

சென்னை மத்திய சிறைச்சாலையில் ஒரு ருசிகரமான சம்பவம் நேற்று நடைபெற்றது.

இரு ஆயுள் கைதிசள் புதுவிதமான சத்தியாக்கிரகத்தில் இறங்கினர். சிறைச்சாலைக் கூரைமீது, சாக்கடைக் குழாய்மூலம் ஏறிஅமர்ந்து, கூரையையே சத்தியாக்கிரகக்கோட்டையாக்கிக் கொண்டனர். இக் கூரையின் உயரம் 25 அடியாகும்.

இவர்கள் இருவரும் முதன் மந்திரி அல்லது உள்துறை மந்திரி வந்தாலன்றி தாம்கூரையை விட்டு இறங்குவதில்லையென்றுசத்தியாக்கிரகம் செய்தனர். தமக்குள்ள குறைகளை விசாரித்து அவற்றை நிவர்த்திசெய்ய இம் மந்திரிகள் அங்கு வரவேண்டுமென்று இவர்கள் அடம்பிடித்தனர்.

தெருவில் சென்று கொண்டிருந்த மக்களுக்கு இவர்கள் கூரைமீதுநின்றகாட்சி கொண்டாட்டமாகவும், சிறை அதிகாரிகளுக்குத்திண்டாட்டமாசவும் இருந்தது. கீழே நின்று சிலர், தோடம்பழம் முதலியவற்றை கைதிகளுக்கு வீசினர். கைதிகளும் அவற்றைச் சுவைத்துச் சாப்பிட்டனர்.

நள்ளிரவில்தான்இருகைதிகளும் கூரையை விட்டு இறங்கினர்களாம்.

# 'எமது உணவை நாமே உற்பத்தி செய்யவேண்டும்'

சங்கானை, புதன்

ஒவ்வொரு குடிமகனும் தனக்குவேண்டிய உணவைத் தானே உற்பத்தி செய்ய முன்வரவேண்டும். இப்படி உணவு உற்பத்தியைக் கூட்ட முன்வந்தால் இன்று எம்மை எதிர்நோக்கியுள்ள உணவு நெருக்கடி தானகவே அகன்றுவிடும். இளைஞர்கள், படித்த வாலிபர்கள் உணவு உற்பத்தித் துறையில் தீவிர கவனஞ் செலுத்துவார்களானல் நிச்சயம் உணவு உற்பத்தியில் ஒரு சாதனையை நாம் நிலைநாட்ட முடியும்.

இவ்வாறு மாதகலில் நடைபெற்ற உணவு உற்பத்தி அதிகரிப்புக் கூட்டத்தில் திரு. பி. கபிரியேல் பிள்ளை குறிப்பிட்டார். மாதகல் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கந்தையா உரையாற்றுகையில் இன்று அரசாங்கம் நமக்குக் கொடுத்திருக்கும் உதவிகளைப் பயன்படுத்தி முன்னேற முயலவேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளின் உழைப்பைப் பயன்படுத்தி அவர்களை முன்னேற்றுவதற்கான பல்வேறு உதவிகளைச் செய்யவேண்டுமென்றூர்.

விவசாயிகளின் கஷ்டநஷ்டங்கள் பற்றியும் ஆராயப்பட்டது.

## ஒல்லாந்துக்கு புதிய பிரதமர்

ஒல்லாந்து, ஏப்ரல் 5

ஒல்லாந்து பாதுகாப்பு மந்திரிப் பதவியிலிருந்து விலகிய 52 வயதான திரு. பீக் டி யோன் என்பவர் ஒல்லாந்தின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.

## பாட்டேர்சனுடன் கிளே மோதுகிருர்

நியூயோர்க், ஏப்ரல் 5

இம்மாதம் 25-ம் திகதி அதிபார குத்துச் சண்டை சாம்பியனன காசியஸ்கிளே [முகம்மது அலி], நெவாடாவில் புளொயிட் பாட்டேர்சனுடன் மோதவிருக்கிருர். இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. பாட்டேர்சன் ஏற்கனவே இருமுறை கிளேயுடன் தோல்வியுற்றவராவார்.

## கொலைவழக்கு

### சிகரெட்டே காரணமாம

புத்தளம், புதன்

சிகரெட் ஒன்று ஏற்படுத்திய சச்சரவு ஒரு நபரின் உயிரைப்பறித்துக்கொண்டு விட்டது. தழுவ என்றஇடத்திலே இப்பரிதாபகரமான சம்பவம் நடைபெற்றுள்ளது.

தழுவவிலுள்ள கடையொன்றுக்குள் யூலியஸ், கபீர் என்ற இரு நபர்களும் சென்றதாகவும், மூன்று சிகரெட் கொண்டுவரும்படி விற்பனையாளரிடம் கூறியதாகவும், சிகரெட் கொண்டுவரப்பட்டதும் ஜோர்ஜ் பெரேரோ என்ற வேருெரு நபர் அந்த சிகரெட்டுகளின் ஒன்றை எடுத்ததாகவும், உடனே யூலியஸ், பெரேராவிடம் யாரைக் கேட்டு சிகரெட் எடுத்ததாக வினவியதாகவும், இதனைத் தொடர்ந்து சச்சரவு முற்றவே யூலியஸ், பெரேராவின் தோளில் கத்தியால் குத்தியதாகவும் மரணவிசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. மரண விசாரணை அதிகாரி எஸ். எம். எம். காசிம் மரணவிசாரணை நடாத்தினர். கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. சந்தேக நபரான யூலியஸ் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## புதிய விமானம்

குரும்பசிட்டி, செவ்.

எயர் சிலோன் ஸ்தாபனம் பிரான்ஸிடமிருந்து வாங்கிய புதிய நோட் 262 விமானம் இன்றுகாலை 8-30 மணிக்கு முதற்தடவையாக பலாலி விமான நிலையம் வந்தடைந்தது. இம்மாதம் 10ந் திகதி முதல் உள்ளூர் பிராந்திய சேவைகளில்ஈடுபடுத்தப்படவிருந்த இப் புதிய விமானம் எதிர்பாராதவகையில் கொழும்பிலிருந்து இன்று காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. ஆடம்பரமற்ற முறையில் பலாலி விமான நிலைய அதிகாரிகளால் புதிய விமானம் வரவேற்கப்பட்டது. குளிர்மையூட்டப்பட்டு 28 பிரயாணிகளுக்கு ஆசனவசதி செய்யப்பட்டுள்ள 'நோட்' விமானத்தை காப்டன் பி. நடராஜா, காப்டன் எஸ். விக்கிரமநாயகா ஆகியோர் இருவரும் இங்கு செலுத்தி வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரசாலை கொலைவழக்கு

சாவகச்சேரி, புதன்

"நான் எனது வயலில் நிற்கும்போது தெற்குத் திசையில் 'ஐயோ! ஐயோ!' எனக் கத்திய சத்தம் கேட்டது. நான் சத்தம் வரும் திசையை நோக்கி ஓடினேன். அங்கு செல்லத்துரை பேரம்பலம் கந்தையா சிவகுருவைக் கத்தியால் வெட்டினார்" என்று சரசாலைக் கொலைவழக்கு நேற்று மாலை சாவகச்சேரி நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்ட போது சாட்சியமளித்த சரவணமுத்து கார்த்திகேசு [59 வயது] என்பவர் கூறினார்.

சாட்சி கார்த்திகேசு தொடர்ந்து சாட்சியமளிக்கையில் சம்பவதினம் நான் வயலில், நிற்கும்போது குளறிய சத்தம் கேட்டு ஸ்தலத்திற்கு ஓடிச்சென்றேன். பேரம்பலத்தின் படலையில் இச்சம்பவம் நடந்தது எதிரி கத்தியால் வெட்டி நுகத்தால்இடித்துக் காலால் முதுகில் மிதித்தார். பின் கலப்பை நுகத்தைத் தனது படலையால் போட்டார். நான் சிவகுருவைப் பார்த்த போது சிவகுரு இறந்துவிட்டார். நான் குளறினேன்.

சாட்சி எதிரியின் வழக்கறிஞரால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

சாவகச்சேரி சட்டவைத்திய அதிகாரி திரு. ஏ. ரி. நல்லையாவும் சாட்சியமளித்தார்.

மேல்விசாரணை இம்மாதம் 12-ம் 18-ம் திகதிகளிலும் அடுத்த மாதம் 2-ம் திகதியிலும் நடைபெறும்.

## யாழ்ப்பாணத்திலும் விசாரணை

யாழ்ப்பாணம், வியா.

முதலாளிமாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட சேமலாபநிதி சம்பந்தப்பட்ட வழக்குகள் இனிமேல் யாழ்ப்பாணத்திலும் விசாரணை செய்யப்படும். இவ்வழக்குகள் இதுவரை கொழும்பில்தான் விசாரணை செய்யப்பட்டு வந்தன.

இவ்வழக்குகளை யாழ்ப்பாணத்திலும் விசாரணை செய்ய ஒழுங்குகள் செய்து தரும்படி யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தொழில் கமிஷனருடன் தொடர்பு கொண்டதைத்தொடர்ந்து யாழ்ப்பாணத்திலும் விசாரணை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## காணமல் போனவர் பிரச்னை

யாழ்ப்பாணம், வியா.

காணமல்போன மாந்தை கிராமசபை ஊழியரான பற்றிக் இரத்தினம் உயிருடன் இருக்கிறாரா அல்லது கொலைசெய்யப்பட்டு விட்டாரா என்ற சந்தேகம் பொலிஸாருக்கு இப்பொழுதுபெரும்பிரச்னையை உண்டுபண்ணியுள்ளது.

மாந்தைக் கிராமசபையில் லிகிதராகக் கடமையாற்றி கடந்த ஜனவரி மாதம் 2-ந் திகதி திடீரென காணமல்போன மேற்படி வாலிபர் பற்றிய பல புதுப் புதுத் தகவல்கள் பொலிஸாருக்கு இப்போது கிடைத்துக்கொண்டிருக்கின்றன.

காணமல்போன பற்றிக் இரத்தினம் காதலில் ஏமாற்றமடைந்ததாகவும் அதனால் அவர்மனமுடைந்து தற்கொலை செய்திருக்கலாமெனவும், அல்லது அவர் மீது விரோதம்கொண்டுள்ள சிலர் இவரை மறைத்து வைத்திருக்கலாமெனவும் பொலிஸாருக்கு இரகசியத் தகவல்கள் கிடைத்துள்ளன. இவரது காதலி யார் என்பதையும் அதுபற்றிய தகவல்களையும் சேகரிப்பதில் வடமாகாண பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். ந. நி.

## 10 லட்சம் கையெழுத்து பெட்டிசம

கொழும்பு, புதன்

வெட்டுப்பட்ட ஒருகொத்தரிசியை திருப்பித்தருமாறு கோரும் 10 லட்சம் பேர் கையொப்பமிட்ட பெட்டிசம்ஒன்றை லங்கா சமசமாசக்கட்சி தயாரித்துவருகிறன. இதற்கு ஏற்கனவே இரண்டு லட்சம் கையெழுத்துகள் சேர்க்கப்பட்டுவிட்டது. இப்பெட்டிசத்தின் ஒருபிரதி எதிர்க்கட்சியினர் நடத்தப்போகும் கூட்டு மேதினக் கொண்டாட்டத்தில் தூக்கிச் செல்லப்படும். மற்றப்பிரதி மே தினத்தன்று இரவு பிரதமருக்கு அனுப்பப்படும்.

## பகிரங்க வரவேற்பு

கொழும்பு, புதன்

மலேசிய பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் இலங்கைக்கு விஜயஞ் செய்யும் பொழுது கொழும்பு மாநகர சபை அவருக்கு ஒருபகிரங்க வரவேற்பை இம்மாதம் 18-ந் திகதி அளிக்க ஒழுங்கு செய்துள்ளது.

## மண்டைதீவு கொலைவழக்கு

யாழ்ப்பாணம், புதன்

மண்டைதீவைச் சேர்ந்த சாம்பசிவமூர்த்தியைக் கொலைசெய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த நால்வர் மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்காக யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. எம். ஜமீல் முன்னிலையில் நேற்று எடுத்துச்கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில் குலசிங்கநாதன், சிதபாதசுந்தரம், பாலசிங்கம், தருமு ஆகிய நால்வர் மீதும் யாழ்ப்பாணம் பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டிருந்தது. வழக்கை விசாரணைசெய்த மாஜிஸ்திரேட் வைத்திய அதிகாரியின் விசாரணைக்காக மேல்விசாரணையை இம்மாதம் 12-ந் திகதிவரை ஒத்திவைத்தார். முதலாம், இரண்டாம் எதிரிகள் சார்பில் புரக்டர் ஏ. அன்ரனியின் உதவியுடன் வழக்கறிஞர் கே. வி. எஸ். சண்முகநாதனும், மூன்றும் எதிரி சார்பில் புரக்டர் த. யோகநாதனும், நான்காம் எதிரி சார்பில் புரக்டர் ஏ. விசுவநாதனின் அனுசரணையுடன் வழக்கறிஞர் கே. வி. எஸ். சண்முகநாதனும் ஆஜராகியிருந்தார்கள். ந. நி.

## தந்திக் கம்பி திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது அதிகரித்து வரும் தந்திக்கம்பிக் களவு பற்றியும் அவைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பொருட்டும் அவைபற்றி ஆராய்வதற்காக வடமாகாணபொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்றுமுன் தினம்காலை ஓர் அவசர மகாநாடு கூட்டியிருந்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற இம்மகாநாட்டில் உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன்கள், திரு. ஆர். சி. தவராசா, திரு. வீரசிங்கா, தந்திப்பகுதிப் பரிசோதகர்கள் ஆகியோர் உட்பட வடமாணத்தைச் சேர்ந்த பொலிஸ்நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் அனைவரும் கலந்துகொண்டனர். கடந்த ஆறு மாதங்களுக்குள் மாத்திரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான தந்திக் கம்பிகள் களவாடப்பட்டுள்ளதாக மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

**வியாழன் 6-4-67**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00,

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை. மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 எங்கள் அதிதி.

இரவு 6-15 தமிழோடிசை பாடல், 6-30 பேச்சு, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 தாள வாத்தியக் கச்சேரி, 7-45 நாடகம்—எஸ். வேலுப்பிள்ளை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி—...

சந்திர சேகரா மர்மம்

# நீதிபதிமுன் அல்பிரட் ஆஜர்; களு அல்பேர்ட் எங்கே?

அநுராதபுரம், செவ்.

சாராயத்தவறணைக் குத்தகைக் காரர் அல்பிரட்சொய்ஸாவுக்குச் சொந்தமான காணியில் புதைக்கப்பட்டிருந்த காணமற்போன சார் சம்பந்தமாக அல்பிரட் சொய்ஸாவும் வில்லிமாமாவும் ஆர்தார் அப்புகாமியும் நேற்று அநுராதபுரம் நீதிபதிமுன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

அவர்கள்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும்வரை நீதிபதி ஏப்ரல் 7ந் திகதிவரை வழக்கை ஒத்திவைத்தார்.

இதற்கிடையில் கலத்தாவை மர்மங்களை துலக்கக் கூடிய ஒரு முக்கியமான ஆசாமி, களுஅல்பேர்ட், இன்னும் கண்மறைவாகவே இருந்து வருகிறார். பொலிஸாருக்கு ஒளித்துத்திரியும் இவரை இம்மர்மங்களில் சம்பந்தப்பட்டதாக கருதப்படும் செல்வாக்குமிக்க சில பெரும் புலிகளும் தேடித் திரிந்து அவரைத் தீர்த்துக் கட்ட முயலுவதாகவும் கூறப்படுகிறது. களுஅல்பேர்ட் யார்கையில் சிக்குவார் என்பது இன்னும் இரண்டொருநாளில் தெரிய வரும்.

### விளக்கமறியலில் இருப்பவருக்கு நஞ்சூட்ட முயற்சி

கலத்தாவை மர்மக் கொலைகள் சம்பந்தமாக விளக்க மறியலில் இருக்கும் ஒருவருக்கு நஞ்சூட்டநடந்த முயற்சியை சி.ஐ.டி. பொலிஸார் கடைசி நேரத்தில் தடுத்துவிட்டனர். செல்வாக்குள்ள மனிதர்ஒருவரே இரண்டு மறியல்வீட்டு அதிகாரிகளின் உதவியோடு இந்த முயற்சியை மேற்கொண்டாரென்றும், மறியலில் இருப்பவரையும் பொலிஸ்பாதுகாப்பில்இருக்கும் வேறு ஐந்து பேரையும் நஞ்சுபோட்டுக் கொல்வதற்குச் சூழ்ச்சி நடக்கிறதென்று ஓர் அநாமதேயப் பெட்டிசம் கிடைத்ததன் பேரிலேயே சி.ஐ.டி.க்காரர் அம்முயற்சியைத் தடுத்துவிட்டார்களென்றும் தெரிய வருகிறது.

இதைத் தொடர்ந்து மறியல் வீட்டிற்கு வருபவர்கள் மீதும் முதலாவது சந்தேக நபர் அல்பிரட் சொய்ஸாவுடன் தொடர்புள்ளவர்கள் மீதும் பொலிஸார் கூர்மையான கவனம்செலுத்தி வருகிறார்கள்.

காணமற்போன நீர்ப்பாசன உத்தியோகத்தர் திரு. ஜூலியஸ்சந்திரசேகராவின் சடலம் புதைக்கப்பட்டுள்ளதென்று சந்தேகிக்கப்படும் இன்னோரிடத்தைப் பொலிஸார் தோண்டிக்கொண்டிருக்கிறார்கள்.

கலத்தாவை கோஷ்டியால் மேலும் 7 பெரிய குற்றங்கள் இயற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் கருதுகிறார்கள்.

ஒட்டுசுட்டானைச் சேர்ந்த நான்கு நீர்ப்பாசன சிப்பந்திகளையும் அநுராதபுரத்திலுள்ள ஒரு நீர்ப்பாசன குத்தகைக்காரரிடம் வேலைபார்க்கும் பதினொரு ஊழியர்களையும் பொலிஸார் விசாரித்து வருகின்றார்கள்.

ஆறு மாதங்களுக்கு முன்பு தலையில் அடிபட்டு மாண்ட ஒரு கலால் அதிகாரியின் மரணம்சம்பந்தமாகவும்பொலிஸார்விசாரணையைபுதுப்பித்திருக்கின்றனர். இதற்கும் கலத்தாவைக் கோஷ்டிக்கும் சம்பந்தமிருக்கலாமென்று நம்பப்படுகிறது.

## 2000 ஏக்கர் காடு சூறைஆடப்பட்டது

கொழும்பு, புதன்

கொழும்பு, குருநாகல், மட்டக்களப்பு, அநுராதபுரம் முதலிய நகரங்களில் வசிக்கும் பெரும் முதலாளிகள் கடந்த இரு வருடங்களாக பத்து லட்சம் ரூபா பெறுமதியான முதிரை, கருங்காலி முதலிய மரங்களை முடிக்குரிய காட்டுநிலங்களில் தறித்து சூறையாடினார்கள்.

காட்டிலாகா ஆராய்ச்சி ஒன்று இதைக்கண்டுபிடித்திருக்கிறது.

## காப்டனுக்கு தேநீர் விருந்து

யாழ்ப்பாணம், வியாழன்

அண்மையில் காங்கேசன் துறைக்கு வந்திருந்த 'இஞ்ச்முள்' என்ற மாவுக்கப்பலின் கப்டனை அன்டர்ஸன் மாஸ்டருக்கு யாழ்ப்பாண மக்கள் துறைமுக தொழிலாளர் பொது சேவை கூட்டுறவுச் சங்கத்தினர் தேநீர் விருந்தொன்றை அளித்துக் கௌரவித்தனர். [ந.நி.]

## நெல் வாங்குவதில் புதிய முறை

கொழும்பு, புதன்

விவசாய இலாகா விதை நெல்லை நேரடியாகக் கமக்காரர்களிடமிருந்து வாங்குவதற்கு ஒழுங்குகள் செய்துள்ளதாக தெரிய வருகிறது. பல புகார்களைத்தொடர்ந்தேஇந் நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளதாம்.

## பஸ் சேவை சீரமைப்பு

நாவலப்பிட்டி, புதன்

ஹட்டன் இ.போ.ச.பகுதியினர் சீரான பஸ்சேவை நடத்தி வருவதாக பொதுவான அபிப்பிராயம் இங்கு நிலவுகிறது. இதற்காக ஹட்டன் பகுதி இ.போ.ச. அதிகாரி திரு. ஆர். டி. டி. சில்வா இ.போ.ச.நிலைய ஊழியர்களைப் பாராட்டியுள்ளார்.

இப்பகுதியில் நல்ல தண்ணீர் என்ற இடத்தில் 7 ஏக்கர் காணியில் இ. போ. ச. நிலையமும் அலுவலகமும் களை தீர்க்கும் மண்டபமும் விரைவில் அமைக்கப்படவிருக்கின்றன.

## தேவாலய சீர்திருத்தம்

சங்கானை, புதன்

சங்கானையிலிருக்கும் பிரசித்திபெற்ற கத்தோலிக்க தேவாலயசலேசியார் ஆலய சீர்திருத்தவேலைகள் துரிதமாகச் செய்யப்பட்டு வருகின்றன.


உறுதியானதும்
நீடித்து உழைப்பதும்
தன்னிகரற்றதுமான

"வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு - பித்தளை மர ஸ்குறு
ஆணிகளை

நீங்கள் வாங்குவதனால்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்கள்.-

என். வைத்திலிங்கம்நிறுவனத்தார்

இரும்பு வியாபாரிகள்

450, பழைய சோனகதெரு, கொழும்பு. 12
தொலைபேசி: 7143 — 2029

கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530



புதுவருடத்தை முன்னிட்டு
ரொலறம்ஸ்
ஸ்தாபனத்தாரின் வீற்பனை

எங்களிடம்

- O லங்கா மணிப்புரி சேலை
- O ,, காஞ்சிபுரம் சேலை
- O ,, பட்டர் நைலெக்ஸ் சேலை
- O ,, பிரை நைலோன் சேலை
- O ,, கைத்தறி சேலை

என்னும் புதுப்புது வகைகளில் தெரிவுசெய்யலாம்.

ரொலறம்ஸ்

46, பெரியதெரு, :-: யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தம்

## யாழ்ப்பாண மாநகரசபை

ஏல விற்பனையாளர்கள், தரகர்கள் பற்றிய நிரல்

28 - 2 - 67 வரை

4-4-67-ம் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியான மேற்படி விளம்பரத்தில் ஏலவிற்பனையாளர் திரு. ஆர். கனகரத்தினம், 35, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி என்பவரது உத்தரவுச் சீட்டு இல. 5 எனத் தவருக வெளியிடப்பட்டுள்ளதை 4 என திருத்திக்கொள்ளவும்.
1724

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
சுடு துவா
[சிங்களம்]

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எஸ். எஸ். ஆர்.
நடித்த
தலைகொடுத்தான் தம்பி

7-4-67 முதல்
ஈஸ்வரன்
[கிளிநொச்சி]
தினசரி 6-30, 9-30
எஸ்.எஸ்.ஆர்.-விஜயகுமாரி
நடித்த
ஆனந்தி 1727

REGAL - JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45
Alex Nicol
Jorge Mistral
in
GUN FIGHTERS OF CASA GRANDE

MANOHARA
JAFFNA
Today Only
Christiane Martel
(Former Miss Universe)
in
ADAM & EVE


## விளையாட்டுக் கழக நிர்வாகிகள்

கோப்பாய், புதன்

கோப்பாய் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கழக மைதானத்தில் கழகத் தலைவர் திரு. ஏ. காசிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

நடப்புவருட போஷகர்களாக திரு. எம். எஸ். இராஜசிங்கம், திரு. ஆதர் எட்வேட் திரு. ரி. டி. குமாரசாமி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக திரு. ஏ. காசிப்பிள்ளையும், காரியதரிசியாக திரு. எம். சிவராஜாவும், தனாதிகாரியாக திரு. எஸ். செல்வரத்தினமும், உபதலைவராக திரு. ரி. அரசபிள்ளையும், உபகாரியதரிசியாக திரு. இ. ராஜனும், உப தனாதிகாரியாக திரு. கே. இராஜலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

## புதுவருடதினவிழா

நாவலப்பிட்டி, புதன்

தமிழ், சிங்கள புதுவருடத்தை முன்னிட்டுநாவலப்பிட்டி ஜயதிலக்கா விளையாட்டுத் திடலில் விழாவொன்று நடைபெறவிருக்கிறது. இவ்விழாவில் கயிறிழுத்தல், மெதுவாகசைக்கிள் ஓட்டம், சறுக்குமரம் ஏறுதல், தலையணைப் போர் ஆகிய போட்டிகள் நடைபெறவிருக்கின்றன.

இவ் விழாவுக்கு நாவலப்பிட்டி எம். பி. திரு. சந்திரா கருணரத்ன தலைமை தாங்கவிருக்கிருர். நாவலப்பிட்டி நகரசபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.


வெலிங்டன் [யாழ்ப்பாணம்]    ராஜ் [நீர்கொழும்பு]

தினசரி பி.ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம், போயாதினம்,
விடுமுறை நாட்களில் காலை 10-30 மணிக்கு

வியப்பு, திகைப்பு,
விறுவிறுப்பு
அனைவரையும் மகிழ்விக்கும்
அற்புதப் படைப்பு
தாய்ப்பாசம், அன்பு
அனைத்துக்கும் ஓர்
எடுத்துக்காட்டு.



எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
எம். ஆர். ராதா, நம்பியார், நாகேஷ்,
மனோரமா, கீதாஞ்சலி, பண்டரிபாய்
நடிக்கும்
அன்னை பிலிம்ஸ்

தாயின் மடியில்

2-வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் [கொழும்பு]  பிளாஸா [வெள்ளவத்தை]  நவா [கொம்பனித்தெரு]
விஜயா [மட்டக்களப்பு]  ஸ்ரீகிருஷ்ணு [திருமலை]
மற்றும் பல திரைகளில்
இருவல்லவர்கள்


லீக் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

# தபால் பகுதியினர் சாம்பியனுகினர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மாவட்ட அரசாங்க சேவை விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற அரசாங்க ஊழியர்களுக்கிடையேயான லீக்உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 'ஏ' பிரிவில் புள்ளி விபரங்களின் பிரகாரம் தபால் பகுதியினர் சாம்பியனுகினர். இவர்களின் இறுதிப் போட்டி சீமெந்துக் கூட்டு ஸ்தாபனக் கோஷ்டியுடன் நடைபெற்றது. இப்போட்டியில் தபால் பகுதியினர் 5—0 கோல்களால் சீமெந்துக்கூட்டு ஸ்தாபனக் கோஷ்டியை வெற்றியீட்டினர். இச்சுற்றுப்போட்டியில் இதுவரை நடைபெற்ற போட்டிகளின் விபரங்கள் வருமாறு:

கடற்படைக் கோஷ்டிக்கும் இ. போ. ச. கோஷ்டிக்கும் நடைபெற்ற போட்டியில் இ. போ. ச, கோஷ்டியினர் 2—1 கோல்களால் கடற்படையைத் தோற்கடித்தனர்.

தபால் கோஷ்டிக்கும் கல்விப்பகுதிக்கும் நடைபெற்ற கடும்மோதலில் தபால் பகுதியினர் 2—0 கோல்களால் கல்விப்பகுதியைத் தோற்கடித்தனர்.

யாழ். கச்சேரி கோஷ்டிக்கும் சிறைச்சாலை கோஷ்டிக்கும் நடைபெற்ற போட்டியில் கச்சேரி கோஷ்டியினர் 4—0 கோல்களால் சிறைச்சாலைக் கோஷ்டியினரை வெற்றியீட்டினர்.

மாநகரசபைக் கோஷ்டிக்கும் பொலிஸ் கோஷ்டிக்கும் நடைபெற்ற போட்டியில் நகரசபைக்கோஷ்டி 2—1 கோல்களால் பொலிசாரை வென்றனர்,

சீமெந்துக் கூட்டு ஸ்தாபனக் கோஷ்டிக்கும் மாநகரசபைக்கோஷ்டிக்கும் நடைபெற்ற போட்டியில் இரு சாராரும் விட்டுக்கொடுக்காமல் மோதிய காரணத்தால் இரு கோஷ்டியும் தலா 1—1 கோல்பெற்று வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடித்தனர்.

சிறைச்சாலைக் கோஷ்டிக்கும் இ. போ. ச. கோஷ்டிக்கும் நடைபெற்ற பெரும் மோதலில் சிறைச்சாலைக் கோஷ்டி 4—2 கோல்களால் இ. போ. ச. கோஷ்டியை வென்றனர்.

தபால் கோஷ்டிக்கும் பொலிஸ் கோஷ்டிக்கும் நடைபெற்ற காரசாரமான போட்டியில் தபால் கோஷ்டி 4—0 கோல்களால் பொலிசாரைத் தோற்கடித்தனர்.

கச்சேரிக் கோஷ்டிக்கும் கடற்படைக் கோஷ்டிக்கும் நடைபெறவிருந்த போட்டிக்கு கடற்படை சமுகம் கொடுக்காததால் கச்சேரி வெற்றியீட்டியது.

கல்விப் பகுதிக்கும் பொலிஸ் பகுதிக்கும் நடைபெற்ற போட்டியில் கல்விப் பகுதியினர் 3—0 கோல்களால் பொலிசாரை வென்றனர்.

தபால்பகுதிக்கும் மாநகரசபைக்கோஷ்டிக்கும் நடைபெற்ற போட்டியில் தபால் பகுதியினர் 3-1 கோல்களால் வெற்றியீட்டினர்.

கச்சேரிக் கோஷ்டிக்கும் இ. போ. ச. கோஷ்டிக்கும் நடைபெற்ற போட்டியில் இரு கோஷ்டியும் ஒன்றை ஒன்று விட்டுக்கொடுக்காமல் கடுமையாக மோதிய காரணத்தால் இரு கோஷ்டியும் தலா 1—1 கோல்கள்பெற்று வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடித்தனர்.

சிறைச்சாலைக் கோஷ்டிக்கும் கடற்படைக் கோஷ்டிக்கும் நடைபெறவிருந்த போட்டிக்கு கடற்படைக் கோஷ்டி சமுகம் கொடுக்காததால் சிறைச்சாலைக் கோஷ்டி வெற்றியீட்டியது.

[6-ம் பக்கம் பார்க்க]

## உடுப்பிட்டியில் களியாட்டு விழா

யாழ்ப்பாணம், வியாழன்

புதுவருடப் பிறப்பையொட்டி இம்மாதம் 11-ம் திகதியிலிருந்து 15-ம் திகதி வரை உடுப்பிட்டியில் களியாட்ட விழாவொன்றை நடத்துவதற்கு உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்ருர். அமைச்சர்வி. ஏ. சுகததாஸா, திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆகியோர் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள விருக்கின்ருர்கள்.

கவிதைப் போட்டி, விளையாட்டுப் போட்டி, மரதன் ஓட்டம், ஆணழகன்போட்டி வண்டில் சவாரி, உப-உணவுப் போட்டி ஆகிய போட்டிகள் இக் களியாட்ட விழாவில் நடைபெற விருக்கின்றன. அகில இலங்கை ரீதியில் நடைபெறும் வண்டிச் சவாரி இம் மாதம் 15-ம் திகதி ''வெல்லன்வெளியில்'' நடைபெறும். போட்டிகளுக்கான விண்ணப்பங்களை போட்டிச் செயலாளர் கரவெட்டி கிழக்கு திரு. டபிள்யு ஆர். அருளையா இம்மாதம் 7-திகதிக்கு முன்னதாக தமக்கு அனுப்பி வைக்குமாறு அறிவித்துள்ளார்.

சிரிக்கெட்

## அரியாலை வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும் யங்லயன்ஸ் கழகத்துக்கும் மிடையே நடைபெற்ற சினேக பூர்வமான கிரிக்கெட் போட்டியில் அரியாலை விளையாட்டுக் கழகம் இனிங்சால் வெற்றியீட்டியது. முதல் இனிங்சில் முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை விக்கெட்டுகளையும் இழந்து 232 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கணேசலிங்கம் 53 ஓட்டங்களையும், உருத்திரேஸ்வரன் ஆட்டம் இழக்காமல் 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

''யங்லயன்ஸ்'' கோஷ்டியின் பந்தெறி வீரர்களான ஜெயரட்னம் 37ஓட்டங்கள் கஷ்டத்துக்கு 4 விக்கெட்டுளையும் பெனடிற் 18ஓட்ட விககெக்ள் நஷ்ட்டத்துக்கு, 2 நகட்டுகளையும் வீழ்த்தினர். ங்யங்லயன்ஸ்'' கோஷ்டியினர் 26 ஓட்டங்களைப் பெற்றனர். இப்போட்டி அரிபொலை மத்திய விளையாட்டு ாழக மைதானத்தில் நகைடற்றது.

தாச்சிப்போட்டி

## நடராஜா கோஷ்டி சாம்பியன்

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 18வது ஆண்டு விழாவை ஒட்டி நடைபெற்ற தாச்சிச் சுற்றுப் போட்டியின் சாம்பியன் போட்டி நடராசா கோஷ்டிக்கும் பத்மநாதன் கோஷ்டிக்குமிடையில்நடைபெற்றது இப்போட்டியில் நடராசா கோஷ்டி 18-11புள்ளிகளால் பத்மநாதன் கோஷ்டியைத் தோற்கடித்து சாம்பியனுகியது. நடராசா கோஷ்டியில் சு. யோகராசா அதிகமான புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தார். இப்போட்டி மேற்படி நிலைய மைதானத்தில் நடைபெற்றது. மேற்படி நிலையம் ஒழுங்கு செய்துள்ள மரதன், சாதாரணசைக்கிள் ஓட்டப்போட்டியின்விண்ணப்ப முடிவுகள் முறையே 17ம்திகதியுடன் முடிவடைகிறது.


## வரி விளம்பரம்

### காணவில்லை

ரிக்கற்புத்தகம்

4-4-67 இரவு 7-30 மணியளவில் எனது பேக்குடன் ரிக்கற் புத்தகமும், லைசென்ஸ் றிசீற் புத்தகம் முதலிய முக்கிய பொருள்களுடன் தவறிப்போய்விட்டது. கண்டெடுப்பவர்கள் தயவு செய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி வேண்டுகிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
1689

### தேவை

யாழ்ப்பாண நகர சபை எல்லைக்குள், தண்ணீர், மின்சாரம், வாட்டசீல் மலகூடம் முதலிய வசதிகளுடன் வீடுவாடகைக்கு உடன் தேவை. விபரங்களுக்கு வி. எம். பேரம்பலம், இல. 158, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.
2373

விற்பனையாளர்

சில்லறை வியாபாரத்தில் அனுபவமும் திறமையும் உள்ள மணமாகாத விற்பனையாளர் தேவை. 15-4-67-ல் நேரில் வரவும். ப. ஜேம்ஸ், பிரதானவீதி, பண்டத்தரிப்பு.
1685

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணனந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


## பண்டத்தரிப்பு கி. மு. சங்க கோரிக்கை

சுழிபுரம், புதன்

'பண்டத்தரிப்பு பட்டின சபை வட்டாரப் பிரிவினையின்போது அந்த அந்த வட்டார மக்களின் அபிப்பிராயம் கேட்கப்படவேண்டும்' என உள்ளூராட்சிக் கமிஷனரைக்கேட்டுக்கொள்ளும் ஒரு தீர்மானம் பண்டத்தரிப்பு கிராம முன்னேற்றச் சங்கத்தினரால் நிறைவேற்றப்பட்டுள்ளது. தீர்மானத்தின் பிரதிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

## கலைவிழா

நயினுதீவு, புதன்

நயினுதீவு மணிபல்லவ கலாமன்றம் தனது 5-வது ஆண்டுக் கலைவிழாவை இம்மாதம் 16-ம், 17-ம் திகதிகளில் நடத்த விருக்கிறது. இவ்விழாமன்ற வாலிபர்களால் புதிதாக அமைக்கப்பட்ட பொது மேடையில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.


ஆரோக்கியமாகவும்
ஆனந்தமாகவும்
விளங்க
உபயோகியுங்கள்
வண்டலெக்ஸ்
இரவோடிரவாக
மலச் சிக்கலை,
அகற்றும்
அற்புதமான
பேதி மருந்து
ஒரு றெக்கிட் அன்ட் கோல்மன்
உற்பத்திப் பொருள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில்

# ஸ்டாலின் மகள் தஞ்சம் கோரினரா?

புதுடில்லி, ஏப்ரல் 5 சம்யுக்தசோஷலிஸ்ட் தலைவர் டாக்டர் ராம் மனேகர் லோகியா இன்று காலை லோகசபை கூடியபொழுது, பிரதம மந்திரி, வெளியுறவு மந்திரி, வர்த்தக மந்திரி ஆகிய மூவருக்குமெதிராக உரிமைப் பிரேரணை கிளப்பினர்

முன்னள் ரஷ்ய அதிபர் ஸ்டாலினின் மகளான ஸ்வெட்லானு விவகாரம் பற்றி இவர்கள் லோகசபையில் தவருன தகவல் அளித்ததாக டாக்டர் லோகியா புகார் செய்தார்.

தாய்மொழி மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ ஸ்வெட்லானு, ராஜாங்க மந்திரி என்ற முறையிலோ அல்லது தனிப்பட்ட முறையிலோ தமக்குப் புகலிடமளிக்க உதவுமாறு திரு. தினேஷ் சிங்கிடம் அனுகவில்லை என வெளியுறவு மந்திரி திரு. சக்ளா சபையில் தெரிவித்திருந்ததாகக்கூறிய டாக்டர் லோகியா, அதை மறுக்கும் வகையில் ஸ்வெட்லானு தமக்குக் கடிதமெழுதியிருப்பதாகத் தெரிவித்தார். அக்கடிதத்தில் ஜனவரி மாதம் இரண்டு தடவை தாம் திரு. தினேஷ்சிங்கைச் சந்தித்துப் பேசியதாக ஸ்வெட்லானு குறிப்பிட்டுள்ளதாக திரு. லோகியா மேலும் கூறினர்.

டாக்டர் லோகியாவின் பிரேரணைக்கு காங்கிரஸ் மெம்பர் ஒருவர் திருத்தம் கொண்டுவந்தார். அதை, எதிர்க்கட்சியினர் எதிர்த்தனர். பிரேரணையைச் சபை நிராகரித்தது.

# '8-ம் திகதி தண்டனையை வாபஸ் பெறுக

## யாழ். லிகிதர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா.

'ஜனவரி 8-ந் திகதி நடைபெற்ற வேலைநிறுத்தத்தின் பயனுக பல அங்கத்தவர்கள் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். இவ் இடமாற்றத்தினுல் எங்கள் அங்கத்தவர்களுக்கு பல கஷ்டங்கள் ஏற்பட்டன. இவ்விஷயத்தை உள்நாட்டுமந்திரியுடன் பேசிய தன் பயனுக எங்கள் அங்கத்தவர்கள் மீண்டும் வசதியான இடங்களுக்கு இடமாற்றம்செய்யப் பட்டனர் என அரசாங்க லிகிதர் சேவாசங்க யாழ். கிளையின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விற்பனைஇலாகா மேலதிக நிலையமொன்றை நிறுவ இணங்கியதுபற்றியும், சிங்கள உத்தியோகத்தர்களுக்கு தமிழ்வகுப்புகள் ஒழுங்கு செய்ததுபற்றியும், புதிதாக நியமிக்கப்பட்ட சிங்கள ஊழியர்களுக்கு தகுந்த வேலைவழங்க மேற்கொண்ட நடவடிக்கைபற்றியும் இவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மாதம் 7-ந் திகதி வை. எம். சி. ஏ. கட்டிடத்தில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் பரிசிலனைக்கு வருகின்றன.

பொதுக்குமாஸ்தாசேவையிலுள்ளவர்கள் அடிப்படைச் சம்பளத்தை ரூபா 120ஆகக்கூட்டும்படி கோருதல்.

8-ந்திகதி நடைபெற்ற வேலைநிறுத்தத்தின் காரணமாக விதிக்கப்பட்ட தண்டனைகளைவிலக்குவது:

வாரத்தில் 5நாள் வேலைத் திட்டத்தை அமுல்நடாத்துவது.

## பிரதமர் டட்லி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இப்பிரச்சினையில் சம்பந்தப் பட்டுள்ள இரு தரப்பினரையும் சந்திக்கச் செய்து பிரச்சினைகளை பேசித் தீர்த்துக் கொள்வதற்கு உதவ இலங்கை தயாராய் இருப்பதாகவும் தமது ஆலோசனைகள் ஏற்றுக் கொள்ளப் பட்டால் இருதரப்பினரும் இலங்கையிலேயே சந்திக்க வசதி ஏற்படுத்த முடியும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

## பீற்றூட் விதை இல்லை

சுழிபுரம், புதன்

பீற்றூட் விதை கிடைக்காததால் இப்பகுதி விவசாயிகள் இம்முறை பீற்றூட் செய்கை செய்யவில்லையென அறியப்படுகிறது.

பீற்றூட் விதை பெற்றுத் தரும்படி விவசாய உத்தியோகத்தர்களை விவசாயிகள் கேட்டுள்ளனர்.

## தற்காலிக நியமனம

கொழும்பு, புதன்

பொதுச்சேவைக் கமிஷன் திரு. இ. எல். அபயகுணவர்த்தனவை தற்காலிகபொலிஸ் அதிபராக நியமித்துள்ளது. திரு. ஜோன் அட்டிகல பொலிஸ் அதிபர் பதவியிலிருந்தும் ஓய்வு பெறுகிருர்.

## திருமங்கலம தொகுதி நியமன தாக்கல்

### 12 அபேட்சகர்

சென்னை, ஏப்ரல்5

சென்னை ராஜ்ய சட்ட சபையின் கீழ் சபைக்குத் திருமங்கலம் தொகுதியிலிருந்து 12 பேர் போட்டியிடுகின்றனர். நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் நேற்றைய தினமாகும். அபேட்சகர் பத்திரங்களை வாபஸ் பெறுவதற்கான கடைசி நாள் இம்மாதம் 7ம் திகதியாகும்.

இப்பன்னிரண்டு அபேட்சகர்களில் இருவர் காங்கிரஸ் கட்சியையும், இருவர் சுதந்திரக் கட்சியையும் சேர்ந்தவர்கள். ஏனைய எட்டுப் பேரும் சுயேச்சையாளர்.

சென்ற பொதுத் தேர்தலில், திருமங்கலம் தொகுதித் தேர்தல் தினத்துக்கு இரண்டு தினங்களுக்கு முன்னதாக, அபேட்சகர்களில் ஒருவரான சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த முத்துராமதேவர் அகால மரணமடைந்ததைத் தொடர்ந்து இத் தொகுதிகாலியாகிற்று.

அவசியம் ஏற்பட்டால் இம் மாதம் 29 ம் திகதிதேர்தல் நடைபெறலாம்.

## ஆசிரியர் இல்லை

புதுக்குடியிருப்பு, புதன்

புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் கிறிஸ்தவ பிள்ளைகளுக்கு சமயபாடம் கற்பிப்பதற்கு ஆசிரியர் இல்லாதது பெரும் குறையாயிருந்து வருகின்றது. இதுவரை காலமும் சமயபாடம் கற்பித்துவந்த ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டபின்னர் இவ்விடத்திற்கு வேறுஒருவரும் நியமிக்கப்படவில்லையாம்.

## ஐயாறன்

[2-ம் பக்கத்தொடர்ச்சி]

திருச்சியிலே பல கூட்டங்களிலும் பேசிய பேச்சுக்களைத் தொகுத்து ஆகாசவாணியளித்தது.

சிறிதுதான் கேட்டேன். தங்களைப் பொதுமக்கள் தூற்றுவதாயும், தங்களின் எதிர்காலமென்ன வென்றும் கவலையுடன் வணிக சங்கத்தார் கேட்டனர். வணிகரிடையே நல்லவரும் கெட்டவரும் இருப்பதாயும், கெட்டவர்களால் வணிக சமூகத்துக்கே கெட்ட பெயர் ஏற்படுவதாயும் கூறி, கெட்டவர்கள்மீது மற்ற வணிகர்கள் உறவைக் கத்தரித்தால் வணிகருக்கு நல்ல எதிர்காலம் இருப்பதாகவும் கரகோஷங்களுக்கிடையே கூறினர். குள்ளமாக உள்ள ஒருவர் தவறுசெய்தால் எப்படி எல்லாக் குள்ளருக்கும் கெட்ட பெயர் ஏற்படுகிறதோ, அதே போலத்தான் வணிகர் விஷயமும் என்று அவர் தம்மைத் தாமே குறிப்பிட்டு நகைச்சுவையுடன் கூறியபோது, பலத்த சிரிப்பும் கரகோஷமும் ஏற்பட்டது. யாரையும் புண்படுத்தாத முறையில், மிக சாமர்த்தியமாகவும் கருத்துள்ள முறையிலும் தக்கபடி பதிலளித்தாரவர். அவர் தலைமையில் தமிழக ஆட்சி மேலாகநடைபெறுமென்பதற்கு அவரது பேச்சு ஒரு நல்ல அறிகுறியாக இருந்தது.

ஃ ஃ ஃ

நாயேன்பலநாளும் நினைப்
பின்றி மனத்துன்னைப்
பேயாய்த்திரிந்தெய்த்
தேன் பெறலாகா வருள்
பெற்றேன்,
வேயார் பெண்ணைத்தென்
பால் வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
ஆயா உனக்காளாய் இனி
அல்லான் எனலாமே.
—சுந்தரமூர்த்திசுவாமிகள்.

[மூங்கில்கள் நிறைந்து வரும் பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரின் கண்ணதாகிய அருட்டுறைத் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் தலைவரே! நாய்போலும் கீழ்மையுடையேனுகிய யான் உன்னை எனது இளைய நாட்கள் பலவற்றிலும் மனத்தால் நினைத்தலின்றிப் பேய்போல் அலைந்து இளைத்தேன் ஆயினும் இதுபோழ்து பெறுதற்கரிய உமது திருவருளை நான் பெற்றேன். இப்பேற்றை எனக்கு அளிக்க வந்த உமக்கு, முன்பே நான் அடியவனுகி, இப்பொழுது "அடியவன்அல்லேன்" என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ.]

## தபால் பகுதியினர்...

[5- ம் பக்கத் தொடர்ச்சி]

சீமேந்துக் கூட்டுஸ்தாபன கோஷ்டிக்கும் பொலிஸ் கோஷ்டிக்கும் நடைபெற்ற கடுமையான மோதலில் சீமேந்துக் கூட்டுஸ்தாபனம் 2—1 கோல்களால் பொலிஸாரை வென்றது.

தபால் பகுதிக்கும் சீமேந்துக்கூட்டுஸ்தாபனக் கோஷ்டிக்கும் நடைபெற்ற மோதலில் தபால் பகுதியினர் 5-0 கோல்களால் சீமேந்துக் கூட்டுஸ்தாபனக் கோஷ்டியை வென்றனர்.

இப்போட்டிகள் யாவும் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றன.

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் மீதுகொண்டுவந்த

# நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி

சாவகச்சேரி, புதன்

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. ஆர். டி. சிவகுருமீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூன்றில்இரண்டு பங்கு வாக்குகளைப் பெறத் தவறியதால் தோல்வியடைந்தது.

தீர்மானத்தை ஆதரித்து ஆறுவாக்குகளும் எதிர்த்து நான்கு வாக்குகளும்கிடைத்தன. ஏழுவாக்குகள்கிடைத்தால்தான் தீர்மானம் நிறைவேறியதாகக் கருத முடியும் எனகூட்டத்துக்குத் தலைமை வகித்த உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தும் அதை ஆதரித்தும் பேசிய அங்கத்தவர்கள் தெரிவித்த குற்றச்சாட்டுகளுக்கு தலைவர் திரு. சிவகுரு பதிலளித்தார்.

சபையின் வரவு-செலவுக்குக் கட்டுப்பட்டே தலைவர் நடந்துகொள்ளமுடியு மென்றும் அங்கத்தவர் எல்லோருடைய விருப்பத்தையும் நிறைவேற்ற முடியாதென்றும் தலைவர் கூறினர். மின்சாரவிநியோகம் சந்தைஆகியவைபற்றிக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை தலைவர் மறுத்தார்.

## யோகிராஜ் விஜயம்

யாழ்ப்பாணம், வியாழன்

யோகிராஜ் சச்சிதானந்தஜி நேற்று காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

கடந்த ஒரு ஆண்டு காலமாக வெளிநாடுகளில் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டிருந்த அவர் இலங்கை திரும்பியபின் இப்பொழுதுதான் யாழ்ப்பாணம் வந்துள்ளார்

திவ்விய ஜீவனசங்கத்தின் யாழ்ப்பாணம் கிளையின் சார்பில் நேற்று நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் அவருக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

## மொழிபெயர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கப்படுவது ஜனநாயக உரிமையாகுமென்ருர். சொற்பொழிவுகள் மொழிபெயர்க்கப்பட்டால் சபையின் எல்லாப் பகுதியினரும் அவைகளைப் புரிந்துகொள்ள முடியுமென்ருர்.

வவுனியா எம். பி. திரு. சிவசிதம்பரம் பேசுகையில், இந்தப் பிரேரணையில் சமஷ்டி வாடை வீசவில்லை. இப்படித்தான் ஐக்கியத்தை வளர்க்கமுடியும் என்ருர்.

### ஆங்கிலத்தில் ஏன்?

வலப்பனை எம். பி. திரு. ஹெரத்பேசுகையில், மொழிபெயர்ப்புகள் தமிழிலும், சிங்களத்லும் இருக்கவேண்டுமென்பது சரிதான் ஆனல் ஆங்கிலத்தில் ஏன் மொழிபெயர்க்கப்படவேண்டும் என்று கேட்கிருர்களென்பது தெரியவில்லை. இதன் காரணமாக இந்தப் பிரேரணையை ஆதரிக்க முடியாமல் இருக்கின்றது என்ருர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், தமிழர்கள் சிங்களத்தையும், சிங்களவர்கள் தழிழையும் கற்கவேண்டும். சர்வகலாசாலைப் படிப்பு வரை பாடபோதனை தாய்மொழியில்தான் இருக்க வேண்டும். இருமொழிகளும் தேசிய பாஷைகள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கையில் ஆங்கிலத்தில் ஏன் மொழிபெயர்ப்புத் தேவை என்று கேட்கிருர்கள் என்ருர்.

சபையில் கோரமில்லாததால் மாலை 5-15-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

## அடுத்த ஆண்டு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாலும்கூட சம்பள உயர்வு பெறமாட்டார்கள் என்பதுடன் தாம் வகிக்கும் மேல் பதவி நிலையையும் இழக்க நேரிடும்.

அரசாங்க சேவைக் கமிஷன் அறிக்கையில் இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

# பிரதிநிதிகள் சபையில் 'ஈழநாடு'

கொழும்பு, புதன்

பிரதிநிதிகள் சபை நூல்நிலையத்தில் 'ஈழநாடு' பத்திரிகை இல்லாதிருப்பது குறித்து கிளிநொச்சி எம். பி. பண்டிதர் இரத்தினம் இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் கவலை தெரிவித்தார். அங்கத்தவர்களின் வசதிக்காக அப்பத்திரிகை நூல்நிலையத்தில் இடம்பெற நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.


## தேவை

வடபகுதி விவசாய
உற்பத்தியாளர்
கூட்டுறவுச் சமாசம்,
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

மேற்படி சமாசத்துக்கு கீழ்க்காணும் எண்ணிக்கை உள்ள 'சி' தர சாக்குகள் தேவை.

[1] 100000 [ஒரு லட்சம்]

[2] 25000 [இருபத்தையாயிரம்]

விபரங்களுக்கு 7-4-67 பகல் 12 மணிக்கு முன்னர் காரியாலய நேரத்தில் காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும்.

இங்ஙனம்,
1730 காரியதரிசி.

## பத்திரிகை தொழிலில்பயிற்சி

பத்திரிகைத் தொழிலில் ஆர்வமுள்ள, பத்திரிகைத் தொழிலையே தங்கள் வாழ்க்கையாக்கிக் கொள்ளும் நோக்கமுள்ள, தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சியுடைய, பட்டதாரிகளுக்குபத்திரிகைத்தொழிலில் பயிற்சியளிக்கப்படும். விரும்புவோர் இல. 1729, C/o 'ஈழநாடு', தபாற்பெட்டி எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு மனுச் செய்யவும். 1729

## மரணஅறிவித்தல்

உடுவில் மகளிர் கல்லூரியில் சேவைபுரிந்த செல்வி எலின் சின்னப்பிள்ளை வைரவநாதர் [சின்னப்பிள்ளை அக்கா] 5-4-67-ல் காலமாகிவிட்டார். சேம ஆராதனை வியாழன் 6-4-67 பிற்பகல் நாலு மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். 1691


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் [illegible] 63-ம் இலக்க இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org